குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.13/2020

அ.சா.5

2025-ம் ஆண்டு நவம்பர் 12-ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 05-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னபையன் @ செல்வம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.37 மணி,

Accused Murugan present. Advocate Mr.Arunachalam present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பூசாரிப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 08.00 மணிக்கு முன்பாக நான், காலைக்கடன் கழித்துவிட்டு, சேலம் – தருமபுரி சாலையில் குறுக்காக நடந்து கடந்தேன். அப்போது, எனது அத்தை மாதம்மாள் மேற்படி சாலையை கடந்தபோது, சேலம் – தருமபுரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் மாதம்மாளின் மீது மோதிவிட்டது.

2. வாகனம் மோதியதில் சிறிது தூரம் தள்ளி கீழே விழுந்தார். அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் மூலமாக அவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர், மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தின்போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார்.

3. இந்திராகாந்தி சிலைக்கு எதிரே விபத்து நடந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விபத்து

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.12 17:40:31 +0530

நடந்தபின்பு, சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து, விபத்து நடந்ததை யார் பார்த்தது என்று கேட்டார்கள். நான் போலிசாரிடம் விபத்து நடந்தது குறித்து சொன்னேன். அதன்பின்பு என்னிடம் மேற்படி கையெழுத்தை வாங்கினார்கள். கையெழுத்து வாங்குவதற்கு முன்பாக போலிசார் எப்படி விபத்து நடந்தது என்று விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி பார்வை மகஜர் பொறுத்தமட்டில், பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. கடந்த 23.03.2019 ஆம் தேதி காலை 05.45 மணிக்கு மேற்படி விபத்து நடந்தது என்றும், அதன்பின்பு, 27.03.2019 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் போலிசார், விபத்து நடந்த சம்பவ இடத்திற்கு வந்து, சம்பவ இடத்தினை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அப்போது நான் சாட்சியாக உடனிருந்து, பார்வை மகஜரில் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கையெழுத்து போட்டேன் என்றாலும், சரி.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. எனது அப்பா பெயர் சின்னதம்பி. எனக்கு தற்போது 29 வயதாகிறது. சம்பவம் நடந்து சுமார் அரைமணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு போலிசார் வந்துவிட்டார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரி. சம்பவம் மேம்பாலத்தில் நடந்தது என்றால் சரியல்ல. மேம்பாலத்திற்கு கீழ் நடந்தது. போலிசார் என்ன எழுதிக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

6. போலிசார் எழுதிய தாளில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரி. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் கிடைக்கப்பெற்றது என்றால் சரி. அழைப்பாணை கொடுக்கப்பட்டபோது போலிசாரை நான் பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற அழைப்பாணையில் எனது கையெழுத்தில் எனது தந்தை பெயரான சி என்று போடப்பட்டது என்றால் சரி. சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரி. இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.12 17:40:34 +0530

கையெழுத்து பெற்றார்கள். போலிசார் சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சரியல்ல.

8. நான் இவ்வழக்கு சாட்சி நாகராஜ் அல்ல என்றாலும், செல்வம் மகன் நாகராஜ் தான் இவ்வழக்கு சாட்சி என்றாலும், சரியல்ல. எனக்கு அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.01 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.12 17:40:37 +0530